**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**முன்னிலை:–** திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.

2024–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ஆம் நாள் திங்கள்கிழமை
திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம், ஐப்பசி திங்கள் 4 ம் நாள்

**இடைக்கால மனு எண். 1573/2017**
**இன்**
**அசல் வழக்கு எண். 436/2016**

1. கந்தசாமி (இறப்பு)
2. K. சுந்தரி
3. K. முத்துசேகர்
4. K. ராதிகா ..மனுதாரர்கள்/1, 8 முதல் 10 பிரதிவாதிகள்

..எதிர்..

சாமிநாதன் .. எதிர்மனுதாரர்/வாதி

**(இ.ம.எண்.441/2022 ல் கடந்த 06.08.2022 தேதியிட்ட உத்தரவின்படி 2 முதல் 4 மனுதாரர்கள் அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.)**

இம்மனு கடந்த 03.09.2024ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. சதீஸ்குமார் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.V. கிரி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவாவை நிராகரிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள திருத்தப்பட்ட மனுவின் சுருக்கம்</u> :–

**2.1** மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள். இறந்து போன 1ம் மனுதாரர் நாச்சிபாளையம் கிராமம் க.ச.எண்.141/1B, 141/4B காலையில் 1.95.50 ஹெக்டர் விஸ்தீரணமுள்ள பூமியை கடந்த 28.06.2005ம் தேதியன்று கிரையம் பெற்றார். கடந்த 30.04.1984ம் தேதியன்றே க.ச.எண்.141/1 என உட்பிரிவு ஆகிவிட்டது. மேற்படி உட்பிரிவின் விபரம் எதிர்மனுதாரர்/வாதிக்கு 30.04.1984ம் தேதிக்கு முன்பே நன்கு தெரியும்.

**2.2** எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையானது மேற்படி உட்பிரிவை ரத்து செய்யும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்/வாதி கடந்த 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் தேதி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.1067/2004ஐ க.ச.எண்.141/1B–ல் உள்ள P.A.P வாய்க்காலில் இருந்து மடை திறந்து தண்ணீர் எடுத்து திருப்பூர் தாலூக்கா, நாச்சிபாளையம் கிராமம் க.ச.எண்.141/1Bல் உள்ள வாதியின் நிலத்திற்கு தண்ணீர் பாய்சுவதை தடுக்கக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுதாரர் மற்றும் வேறு சில நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார்.

**2.3** நாச்சிபாளையம் கிராமம் க.ச.எண்.141/1 ஆனது க.ச.எண்.141/1B. க.ச.எண்.141/4B, க.ச.எண்.141/1C ஆகிய உட்பிரிவுகளில் எதிர்மனுதாரர்/வாதி மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட 2004ம் ஆண்டே மேற்படி அ.வ.எண்.1064/2004ல் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி வழக்கானது முழுமையான விசாரணைக்கு பின்னிட்டு கடந்த 30.06.2008ம் தேதி தள்ளுபடியானது. அதற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்படவில்லை. 1923ம் ஆண்டு தமிழ்நாடு நிலஅளவை மற்றும் எல்லைகள் சட்டம், பிரிவு 14ன் படி சொத்து பொறுத்து எல்லை பிரச்சனை எழும் போது அது குறித்து வழக்கு தாக்கல் செய்ய 3 வருட காலம் கால அவகாசம் காலவரையறை சட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 2 விதி

2ன் கீழ் எதிர்மனுதாரர்/வாதி மேற்படி வழக்கில் விடுபட்ட பரிகாரத்தை இவ்வழக்கில் கோர முடியாது. 1923ம் ஆண்டு தமிழ்நாடு நிலஅளவை மற்றும் எல்லைகள் சட்டம், மற்றும் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 2 விதி 2ன் கீழ் தடை செய்யப்பட்டுள்ளதால், அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவாவை நிராகரிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>

**3.1** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. திருப்பூர் தாலூக்கா, நாச்சிபாளையம் கிராமம் க.ச.எண்.144/1ல் 3.76 ஏக்கர் பூமியானது கடந்த 01.06.1956, 07.05.1956, 03.09.1992ம் தேதிகளிட்ட கிரையப்பத்திரப்படியும் மற்றும் 22.10.1979, 04.06.1986 தேதிகளிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படியும் எதிர்மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது.

**3.2** வருவாய் ஆவணங்கள் சொத்தின் மூல ஆவணங்கள் ஆகாது. வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் இருதரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்தின் அடிப்படையில் முழுமையான வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். தாவா சொத்து பொறுத்து உரிமைமூலப் பிரச்சனை நிலுவையில் உள்ளதே தவிர எல்லைப் பிரச்சனை இல்லை. அவ்வாறு இருந்தால் தான் தமிழ்நாடு நிலஅளவை மற்றும் எல்லைகள் சட்டத்தின்படி பரிசீலிக்க இயலும். அசல் வழக்கானது தாவா சொத்து பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 2 விதி 2 இவ்வழக்கிற்கு பொறுந்தாது. எவ்வித முகாந்திரமும் இன்றி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், " மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**6. தீர்வு :–**

**6.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், எதிர்மனுதாரர்/வாதியால் 2004ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.1067/2004 வழக்கின்போதே தாவா சொத்து பொறுத்து ஏற்பட்ட உட்பிரிவு அவருக்கு நன்கு தெரிந்துள்ளது என்றும், மேற்படி உட்பிரிவானது 1984ம் ஆண்டே ஏற்பட்டுவிட்டது என்றும், அ.வ.எண்.1067/2004 வழக்கில் மேற்படி உட்பிரிவை எதிர்மனுதாரர்/வாதி ஒப்புக்கொண்ட பிறகு அதனை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால், தமிழ்நாடு நிலஅளவை மற்றும் எல்லைகள் சட்டம், பிரிவு 14 மற்றும் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 2 விதி 2ன் கீழ் அசல் வழக்கு தடை செய்யப்பட்டுள்ளதால் மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், தாவா சொத்து எதிர்மனுதாரர்/வாதியின் உரிமை மூல பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்பதாலும், வருவாய் ஆவணங்கள் சொத்தின் உரிமை மூல ஆவணங்கள் ஆகாது என்பதாலும், முழுமையான வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு தான் அசல் வழக்கு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதா என்ற விபரம் தெரிய வரும் என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது தாவா சொத்து பொறுத்து

விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுதாரர்/வாதி, இறந்து போன 1ம் எதிர்மனுதாரர் மற்றும் இருவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.1067/2004ல் திருப்பூர் யூனிட் 2, பி.ஏ.பி உதவி செயற்பொறியாளர் பதிவு சான்றிதழ் எண்.65/2000ல் வழங்கிய சான்றிதழில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கேற்ப திருப்பூர் தாலுாக்கா, நாச்சிபாளையம் கிராம புல எண்.141/1Cல் உள்ள வாதியின் நிலங்களுக்கு முறைப்படி புல எண்.141/1பி–ல் உள்ள பி.ஏ.பி கால்வாயிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்ளும் வாதியின் உரிமையை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, குடும்பத்தினரோ எவ்விதமான இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் மற்றும் வழக்கின் செலவு தொகை கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டு கடந்த 30.06.2008ம் தேதி திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் மேற்படி வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதை இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அதனை ம.சா.ஆ.1 அ.வ.எண்.1067/2004ன் தீர்ப்பாணை உறுதி செய்கிறது.

**6.4** மேற்படி அ.வ.எண்.1067/2004 ஆனது இம்மனுதாரர்/வாதியால் தண்ணீர் எடுக்கும் உரிமை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், இவ்வழக்கானது தாவா சொத்தில் மனுதாரர்/வாதியின் உரிமை மூலம் குறித்து விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில், கடந்த 19.11.2016ம் தேதி பிரதிவாதிகள் நில அளவையர் உதவியுடன் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் சொத்துக்களை அளவீடு செய்ய முற்பட்டு எதிர்மனுதாரர்/வாதியின் சொத்தை ஆக்கிரமிக்க முயற்சித்ததாக வழக்கு மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி அ.வ.எண்.1067/2004ன் வழக்கு மூலமும், இந்த அசல் வழக்கின் வழக்கு மூலமும் வெவ்வேறு என்பதால் 1923ம் ஆண்டு தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைகள் சட்டம் மற்றும் 1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 2 விதி 2 இவ்வழக்கிற்கு பொருந்தாது

என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**6.5** மேலும் அ.வ.எண்.1067/2004 மற்றும் மேல்முறையீட்டு வழக்கு எண்.11/2009ல் தீர்மானிக்கப்பட்ட பிரச்சனையும், இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனையும் வெவ்வேறு என்பதாலும், அவ்வழக்கின் பரிகாரமும், இவ்வழக்கின் பரிகாரமும் வெவ்வேறு என்பதாலும் முன்தீர்ப்பு தடை கோட்பாடு இவ்வழக்கிற்கு பொருந்தாது என்று முடிவு செய்து மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,** மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவுதொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2024.10.21 17:07:20 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சி**</u> இல்லை.

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 30.06.2008 | அ.வ.எண்.1067/2004 வழக்கின் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 30.06.2008 | அ.வ.எண்.1067/2004 வழக்கின் தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 22.07.2011 | A.S.No.11/2009 வழக்கின் தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | 22.07.2011 | A.S.No.11/2008 வழக்கின் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | 18.01.2019 | 2வது S.A.No.365/2012 வழக்கின் தீர்ப்புரை | Wep கணிணி நகல் |

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :**</u> இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2024.10.21 17:07:29 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 1ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd. A. Subashri

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை.

Sd. A. Subashri

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.